**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS.408/2023

பெயர் : ராஜலெட்சுமி (PW2) (Cross )

த/க/பெ. :

தேதி :28.08.2025

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**முதல் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நிலத்தை நான் அடமானம் வைத்துள்ளேன் எனக்கு படிக்க தெரியாததால் அவர்கள் எழுதி வாங்கி விட்டார்கள் அதனால் வழக்கு போட்டுள்ளேன். வழக்கு சொத்து வள்ளுவக்குடி கிராமத்தில் உள்ளது என்றால்சரிதான். எத்தனை அயிட்டம் வழக்கு சொத்து என்பது தெரியவில்லை. காவல் துறையில் நிலத்தை ஏமாற்றி வாங்கியதாக புகபார் கொடுக்கவில்லை வழக்கு போட்டுவிட்டேன். உண்மையாகவே 1ம் பிரதிவாதி ஏமாற்றி வாங்கியிருந்தால் காவல் துறையில் தான் புகார் கொடுத்திருந்திருப்பேன் வழக்கு போட்டிருக்க மாட்டேன் என்றால்சரியல்ல. வழக்குசொத்துக்களில் ஒரு சொத்து என் கணவர் பெயரிலும் ஒரு சொத்து என் பெயரிலும் கிரயம் வாங்க பட்டது என்றால் சரிதான். நாங்கள் இருவரும் சேர்ந்து தான் முதல் பிரதிவாதிக்கு பத்திரம் பதிவு செய்து கொடுத்தோம் என்றால் சரிதான். நானும் என் கணவரும் பத்திர பதிவிற்கு பதிவு அலுவலகத்திற்கு சென்றோம் என்றால் சரிதான். ஆனால் அதில் இருந்த விபரங்கள் எனக்கு தெரியவில்லை. பத்திர பதிவின் போது சார் பாதிவாளர் பணம் எல்லாம் பெற்றுக் கொண்டோமா பத்திரம் பதிவு செய்யலாமா என்று என்னை கேட்டார்கள் என்றால் சரிதான். சார் பதிவாளர் எங்களை முறையாக விசாரணை செய்துதான் பத்திர பதிவு செய்தார் என்றால் சரியல்ல. என் கணவருக்கு மின் சார விபத்து ஏற்பட்டது தொடர்பாக வழக்கு எதுவும் பதிவு செய்யவில்லை. அதற்கான சிகிச்சை ஆவணம் எதுவும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை. உண்மையிலேயோ என் கணவருக்கு மின்சார விபத்து ஏற்படவில்லை என்றாலும் வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு விபத்து ஏற்பட்டிருந்தால் மருத்து சிகிச்சை ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. 2016 ல் என் சொத்தின் மதிப்பு ரூபாய் 2 லட்சம் என்றால் சரிதான். தற்போதைய மதிப்பு தெரியவில்லை. சொத்து குறைந்த மதிப்பில் விற்பணை செய்துவிட்டு தற்போது சொத்தின் மதிப்பு அதிகமானவுன் திரும்ப கேட்கிறேன் என்றால் சரியல்ல. கிரய

ஆவணமாக எழுதி பதிவு செய்த விபரம்எனக்கு 5 வருடங்களுக்கு முன்பே தெரியும் என்றால் சரிதான். வில்லங்க ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கிற்கு முன்பு வழக்கறி ஞர் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரிதான். முதல் பிரதிவாதி சட்டபடியான உரிமையார் என்பததல் வழக்கு சொ்தை விற்க கூடாது என்று கேட்க எனக்கு உ ரிமை இல்லை என்றால் சரியல்ல. எங்களுக்கு உரிமையான சொத்தை முதல் பிரதிவாதிக்கு விற்று விட்டதால் சொத்தில் எங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதால் இந்த வழக்கு தாக்கல் செய்ய எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதியின் கிரய ஆவணம் சட்டபடி பதிவு செய்யப்பட்டுள்ளதால் அதை செல்லாது என்று நாங்கள் கேட்க இயலாது என்றால் சரியல்ல. 2016 நான் உள்ள மனநிலை உடல் நிலையில் இருந்தேன் என்றால் சரிதான் ஆனால் எனக்கு விபரம் தெரியவில்லை. எனக்கு எல்லா விபரங்களும் தெரியும் என்றாலும் வழக்கிற்காக தெரியாது என்று கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. சொத்தை நாங்களே கிரயம் பேசி கிரய தொகையை பெற்றுக் கொண்டு கிரய ஆவணம் எழுதி பதிவு செய்து கொடுத்து விட்டு தற்போது கிரய ஆவணம் செல்லாது என்று கேட்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. சொத்தை முதல் பிரதிவாதி வசம் ஒப்படைக்க வேண்டிய அவிசய்ம இல்லை என்றால் சரியல்ல. நான் கேட்க கூடிய பரிகரம் கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல.

**<u>2,3 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

ஏமாற்றி எழுதி வாங்கிய கிரய ஆவணம் செல்லாது என்று வழக்கு போட்டுளேளன். அரசு அதிகாரிகள் மீது தடை உத்தரவு கோர இயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொருத்து பதிவு சட்டங்களுக்கு உட்பாட்டு 2 ம்டபிரதிவாததி ஆவணத்தை பதிவு செய்துள்ளதால் அவருக்கு எதிராக எந்த பரிகாரமும் கேட்க இயலாது என்றால் சரியல்ல. 2, 3 பிதிவாதிகளுக்கு எதிராக வழக்கில் எவ்வித பரிகாரமும் கேட்க இயலாது என்பதால் அவர்களுக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யகூடியது என்றால் சரியல்ல.